ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2337/19 - 2023 ජූනි මස 23 වැනි සිකුරාදා - 2023.06.23

2337/19 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 11/1980 (40)*

**1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டம்**

*1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின்கீழ் உணவு மதியுரைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

சுகாதார அமைச்சர்.

கொழும்பு,
2023, யூன் 12.

**ஒழுங்குவிதிகள்**

2006 ஆம் ஆண்டின் ஒகத்து 3 ஆந் திகதிய 1456/22 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 2006 ஆம் ஆண்டின் உணவு (மரபியல் ரீதியில் திரிபுபடுத்தப்பட்ட உணவுகளின் இறக்குமதி, விற்பனை மற்றும் சீட்டுத் துண்டிடுதல் கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள், அதன் 13 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றன :-

"13. பூச்சியம் தசம் ஒன்பது சதவீதத்துக்கு (0.9%) குறைந்த மரபியல் ரீதியில் திரிபுபடுத்தப்பட்ட அங்கஜீவிகளை அல்லது சேதனவுறுப்புகளைக் கொண்டுள்ள அல்லது உடையதாகவுள்ள உணவு இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையிலிருந்து விலக்களிக்கப்படுகின்றது :

ஆயினும், அத்தகைய மரபியல் ரீதியில் திரிபுபடுத்தப்பட்ட அங்கஜீவிகள் அல்லது சேதனவுறுப்புகள் இருப்பது தொழில்நுட்ப ரீதியில் தவிர்க்க முடியாததாக கருதப்படுதலும் அங்கஜீவிகள் அல்லது சேதனவுறுப்புகளை விஞ்ஞான ரீதியிலான எதிர்மறை விளைவு மதிப்பீடொன்றுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன் பாதுகாப்பானதாகக் கருதப்படல் வேண்டும்.".

EOG 06-0169

1A - PG 6365 — 3506 (2023/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.